# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 21 திங்கட்கிழமை 07.08.2023 கதிர் 45

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவர்களைப் பிடித்த

# தமிழ் மீனவர்களைக் கைது செய்த பொலிசார்! முல்லையில் பொதுமக்கள் எதிர்ப்புப் போராட்டம்!



குமுழமுனை தண்ணி முறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களைக் கைது செய்தமையைக் கண்டித்தும் அவர்களை விடுவிக்கக் கோரியும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்பு குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவர்களைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த குமுழமுனை தண்ணி முறிப்பு, ஹிச்சிராபுரம் மீனவர்களைகைதுசெய்தமைக்குஎதிராகவும், அவர்களை விடுவிக்கக் கோரியும் குறித்தபோராட்டம்இன்றையதினம்முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக காலை 10.30 2▶

## பத்து வருடங்களுக்கு ரணிலே ஜனாதிபதி! அடித்துக் கூறுகின்றார் நவீன் திஸாநாயக்க

அடுத்த 10 வருடங்களுக்கு நாட்டின் ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே செயற்படுவார் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார்.

சஜித் பிரேமதாஸவுக்கு அதிகமானோர் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களித்திருந்தனர். எனினும், அவரால் ஜனாதிபதியாக வர முடியவில்லை. பிரதமர் பதவியைக்கூடப் பெறுவதற்கு அவர் தயக்கம் காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றில் ஒருவர் மாத்திரமே இருந்தார். அவரால் நாட்டின் ஜனாதிபதியாக இருக்க முடிந்துள்ளது.

எனவே, அடுத்த 10 வருடங்களுக்கு நாட்டின் ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே செயற்படுவார், என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (03)

## கல்வி அறக்கட்டளையை மேம்படுத்தி, 300 கோடியை மலையக கல்வி வளர்ச்சிக்கே பயன்படுத்தவேண்டும்!

**மனோ கணேசன் எம்.பி. இந்தியத் தூதுவரிடம் கோரிக்கை**



இந்தியத் தூதரகத்தில் அமைந்துள்ள பல்லாண்டு கால பழைமை வாய்ந்த மலையகக் கல்வி அறக்கட்டளையை புதுப்பித்து, நோக்கங்களை விரிவாக்கம் செய்யுங்கள். அதில் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து இந்திய வம்சாவளி மலையக எம்பிகளையும், மலையக கல்வியியலாளர்களையும், சமூக முன்னோடிகளையும், மலையக கல்வி அபிவிருத்திக்காகப் பணியாற்றும் மன்றங்களையும் ஒன்றிணையுங்கள்.

இது தொடர்பாக, நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசி அதற்கான விசேட வாய்ப்பு, விதி முறைமைகளையும் பெற்றுத்தருவோம், என இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால் பாகலலேயிடம் 2▶

## சீனக்குடா விமான விபத்தில் இரு அதிகாரிகள் உயிரிழப்பு

**விசாரணைக் குழு நியமனம்**

திருகோணமலை - சீனக்குடா விமானப் பயிற்சித் தளத்தில் விமானப் பயிற்சியில் ஈடுபட்ட விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த விமானப் பயிற்சியாளர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கை விமானப் படையின் சீனக்குடா விமானப் பயிற்சிக் கல்லூரியில் அமைந்துள்ள இலக்கம் 1 விமானப் பயிற்சிப் பிரிவின் விமானிகளுக்குப் பயிற்சியளிக்கப் பயன்படுத்தப்படும் பி.ரி. 6 ரக விமானம் இன்று முற்பகல் 11:27 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த இரண்டு அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச விசேட விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளார். (03)

## அமைச்சர் கஞ்சனவிற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

இதேவேளை, மாத்தறையில் உள்ள மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகராவின் இல்லம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்குமாறு கோரி விவசாயிகள் குழுவொன்று மாத்தறைக்குச் செல்லவுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதன்படி, அமைச்சரின் இல்லத்திற்குச் செல்லும் அனைத்து வீதிகளிலும் பொலிஸ்வீதித்தடைகள் போடப்பட்டுள்ளதாகக் குறிப் பிடப்படுகிறது.

அத்துடன், ஹம்பாந்தோட்டையில் இருந்து மாத்தறைக்குச் செல்லும் வழிகளிலும், கொழும்பில் இருந்து மாத்தறைக்குச் செல்லும் வழிகளிலும் பொலிஸ் வீதித்தடைகள் போடப்பட்டுள்ளதாகவும், குறித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் 24 மணிநேரமும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 25 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.


## 13ஐ முற்றாக நீக்கி விடவும்! விமல் வீரவன்ச அறிவுரை

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி, என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடும் என்று நாம் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றோம். இந்த எச்சரிக்கையை மீறி ஜனாதிபதி 2▶

## அதிக வெப்பநிலைக்கு முகம்கொடுக்கும் தெற்காசிய சிறுவர்கள் - யுனிசெப் கவலை

யுனிசெப்பின் கூற்றுப்படி, அதிகரித்த வெப்பநிலையால் ஏறக்குறைய அரை பில்லியன் குழந்தைகள் பாதிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது.



யுனிசெப்பின் 2020 தரவுகளின் பகுப்பாய்வில், ஆப்கானிஸ்தான், இந்தியா மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் 460 மில்லியன் சிறுவர்கள் ஒரு வருடத்தில் 83 அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் 35 பாகை செல்சியஸ் வெப்பநிலைக்கு ஆளாகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 18 வயதுக்குட்பட்டவர்கள் அதிகம் பாதிக்கப்படும் பகுதியாக ஆசியா 2▶

இலங்கையிலிருந்து வெளிவரும் மாலைச் செய்தி இதழ்

# வறட்சியுடன் கூடிய காலநிலையால் 69,000 க்கும் அதிகமானோர் பாதிப்பு

தற்போது யாழ் மாவட்டத்தில் நிலவுகின்ற வறட்சியுடன் கூடிய காலநிலை காரணமாக இதுவரை 21,714 குடும்பங்களைச் சேர்ந்த 69,113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், என்று யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இதில் சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுகளில் கூடுதலான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

அந்த வகையில், சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 15,965 குடும்பங்களைச் சேர்ந்த 49,160 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 3,135 குடும்பங்களைச் சேர்ந்த 11,160 பேரும், நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1,028 குடும்பங்களைச் சேர்ந்த 3,146 பேரும், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 956 குடும்பங்களைச் சேர்ந்த 3,067 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



தற்போது 6,053 குடும்பங்களைச் சேர்ந்த 19,704 பேருக்கு குடிநீர் விநியோகத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (01)

# அவுஸ்திரேலிய ரி–20 அணிக்கு தலைவராக மிச்செல் மார்ஷ்



எதிர்வரும் தென்னாபிரிக்க சுற்றுப் பயணத்திற்கான தமது ரி-20 கிரிக்கட் அணிக்கான புதிய தலைவராக மிச்செல் மார்ஷ் இனை அவுஸ்திரேலியா நியமித்துள்ளது.

இதேவேளை, தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்திற்கு இடது கை வேகப்பந்து வீச்சாளர் ஸ்பென்சர் ஜோன்சன் மற்றும் சகலதுறை வீரர்களான ஆரோன் ஹார்டி மற்றும் மட் ஷோர்ட் ஆகிய மூன்று புதிய வீரர்களும் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்தியாவில் வரும் ஒக்டோபரில் தொடங்கும் 50 ஓவர் உலகக் கிண்ணத்திற்கான அவுஸ்திரேலிய அணியை பட்கம்மின்ஸ் வழி நடத்தவுள்ளார். (ணா)

## கல்வி அறக்கட்டளையை...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

தெரிவித்ததாக, தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தூதுவருடன் நிகழ்த்தப்பட்ட சந்திப்பில், மலையக, மக்களுக்கான இந்திய அரசின் நன்கொடை தொடர்பாகப் பேசப்பட்டவை பற்றி வினவியபோது, த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் ஊடகவியலாளர்களிடம் இந்தத் தகவல்களை வழங்கியுள்ளார்.

இந்தியத் தூதரகத்தில் இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளை இருக்கின்றது. அது இப்போது முறையாகச் செயற்படுவதில்லை. அதைப் புதுப்பியுங்கள். புலமைப் பரிசில்களை மட்டுமே வழங்கி வந்த அதன் செயலாற்றல் நோக்கங்களையும், வீச்சு வரையறையையும் விரிவாக்கம் செய்யுங்கள். அதன் பெயரையும் காலத்திற்கு ஏற்ப மாற்றுங்கள். கல்வி உதவி பெறுகின்ற மாணவர்களின் தகைமைகளையும், புலமைப் பரிசில் எண்ணிக்கையையும், தொகையையும் அதிகரியுங்கள்.

பிரதமர் மோடி உறுதியளித்த 300 கோடி நன்கொடையை மலையக கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்துங்கள். இந்த அறக்கட்டளை இது தொடர்பில் இலங்கை அரசுடன் ஒத்துழைத்து செயற்பட வேண்டும். ஆனால், பின்தங்கிய நமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியின் முன்னுரிமை திட்ட வகுப்பாளராக, கண்காணிப்பாளராக கல்வி அறக்கட்டளைதான் செயற்பட வேண்டும். அந்நிதி யாருக்காக, எதற்காக வழங்கப்பட்டதோ, அந்த நோக்கங்களுக்காக மட்டுமே அது பயன்படுத்தப்பட வேண்டும்.

அறக்கட்டளையின் செயலாற்றல் நோக்கங்களின் மூலம் மலையகக் கல்வி, தொழில் பயிற்சி விவகாரங்களில் அக்கறை காட்டப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக நாம் உங்களுக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளோம்.

இன்றைய முன்னுரிமைப்படி, எமது சமூகத்திற்கு, விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை. அல்லறும் மலையக இளம் பெண்களுக்கான தாதியர் பயிற்சிக் கல்லூரி வேண்டும். இந்த கல்வி அறக்கட்டளை பண புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கையும், வழங்கப்படும் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும். பரிசில் பெறுகின்ற பெறுநர்களுக்கான வாழ்விடத் தகைமைகள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். அரச பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எமது இந்தக் கோரிக்கைகளை செவிமடுத்த தூதுவர் கோபால் பாக்லே, பேசப்பட்டதன் உள்ளக விடயங்களை, இம்மாத இறுதிக்குள் மீண்டும் சந்தித்துப் பேசுவோம், என்று எமக்கு உறுதி அளித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 13ஐ முற்றாக நீக்கி...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

செயற்படக்கூடாது.

நாட்டில் தற்போது 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரம் பெரும் பிரச்சினையாக உருவெடுக்கின்றது. எனவே, அந்தச் சட்டத்தை முற்றாக நீக்கி விடுவதே சிறந்த வழி.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்காக இந்த நாட்டைப் பிளவுபடுத்த ஒருபோதும் இடமளியோம், என்றும் அவர் உறுதிபடக் கூறியிருக்கிறார். (03)

## அதிக வெப்பநிலைக்கு...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இனங்காணப்பட்டுள்ளது.

உலகளவில் வெப்பநிலையால் பாதிக்கப்பட்ட 32 சதவீத சிறுவர்களுடன் ஒப்பிடும்போது, தெற்காசியாவில் 76 சதவீத சிறுவர்கள் அதிக வெப்பநிலைக்கு ஆளாகியுள்ளனர் என்று பகுப்பாய்வு காட்டுவதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் இப்போது உலகில் அதிக வெப்பமானவை அல்ல. ஆனால், இங்குள்ள வெப்பம் மில்லியன் கணக்கான பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களுக்கு உயிருக்கு ஆபத்தான அபாயங்களைக் கொண்டுவருகிறது என யுனிசெப்பின் தெற்காசியாவின் பிராந்திய இயக்குனர் சஞ்சய் விஜேசேகர தெரிவித்தார்.

மேலும், குழந்தைகள், சிறுவர்கள், ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள், பக்கவாதம் மற்றும் பிற கடுமையான விளைவுகள் உடையவர்கள் ஆகியோர் இதனால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதால் நாங்கள் குறிப்பாக கவலைப்படுகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறு பிள்ளைகளால் வெறுமனே வெப்பத்தைக் கையாள முடியாது. நாங்கள் இப்போது செயல்படவில்லை என்றால், இந்தச் சிறுவர்கள் வரும் ஆண்டுகளில் அடிக்கடி கடுமையான வெப்ப அலைகளின் சுமைகளைத் தாங்க நேரிடுவார்கள், எனவும் விஜேசேகர கவலை வெளியிட்டுள்ளார்.

சிறுவர்களால் இத்தகைய வெப்பநிலை மாற்றத்திற்கு விரைவாக இசைவாக்கமடைய முடியாததால், நிலைமை மோசமடைகிறது என்று யுனிசெப் எச்சரிக்கின்றது.

அதிகரித்த வெப்பநிலையால் மயக்கம் மற்றும் மோசமான மன வளர்ச்சியிலிருந்து நரம்பியல் செயலிழப்பு, வலிப்புத் தாக்கங்கள் மற்றும் இதய நோய்கள் வரையான உயிருக்கு ஆபத்துகள்கூட ஏற்படலாம் .

கர்ப்பிணிப் பெண்களும் குறிப்பாக வெப்பத்தால் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு குறைப்பிரசவம் மற்றும் ஆரோக்கியமற்ற பிரசவம் போன்றவற்றை அனுபவிக்க நேரலாம் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

காலநிலை நெருக்கடி, எதிர்காலத்தில் அடிக்கடி நீண்ட வெப்ப அலைகளை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். (மி)

## தமிழ் மீனவர்களைக்.....

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

மணியளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு குமுழமுனை தண்ணிமுறிப்பு மக்களுக்கும், ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் கஜபாகுபுர, சம்பத்நுவர, ஜனகபுர, கலியாணபுர பகுதியிலிருந்து வந்த பெரும்பான்மையினர் அத்துமீறி கடந்த சனிக் கிழமையன்று மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து மீனவ சங்கத்தினருக்கும், பெரும்பான்மையின மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 38 சிங்கள மொழிபேசும் மீனவர்களையும் , அவர்கள் மீன்பிடிக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் குறித்த பகுதி மக்கள் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

எனினும், பொதுமக்களால் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர்களில் ஒன்பது பேர் தப்பிச் சென்றுள்ளனர்.

அதேவேளை, பதிவு செய்யப்பட்ட ஹிச்சிராபும், குமுழமுனை தண்ணிமுறிப்பு சங்கத்தினைச் சேர்ந்த 17 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து இன்று நடைபெற்ற குறித்த போராட்டத்தில், பொலிஸாரிடம் ஒப்படைத்தவர்கள் தப்பிச் சென்றது எப்படி?, உயிர் போனாலும் உரிமையை விட்டுக் கொடுக்கோம், தமிழ்த் தேசத்தில் தமிழருக்கு உரிமை இல்லையா?, எமது வாழ்வாதாரத்தில் கை வைக்காதே, சட்ட பூர்வ தொழிலாளர்களை கைது செய்தது எவ்வாறு?, நிறுத்து நிறுத்து பெரும்பான்மையினரின் அத்து மீறலை நிறுத்து, சட்டத்தை மீறி தொழில் செய்வோரைத் தண்டிக்க யாரும் இல்லையா? அரச அதிகாரிகளே, தமிழ் பேசும் மீனவர்களின் உடமைகளை நாசமாக்காதே, சட்ட விரோத தொழிலாளருக்கு பொலிஸார் உடந்தையா? போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பாதாதைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பியுள்ளனர்.

போராட்டத்தின் பின்னர் தமிழ் பேசும் மீனவ சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் அடங்கிய மகஜர் அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி பிரச்சினையை கதைத்ததன் பின்னர் நிரந்தரத் தீர்வினைப் பெற்றுத்தர முயற்சி செய்வதாகவும், கோரிக்கைகளை உரிய அதிகாரிகளிடம் தெரிவிப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பொதுமக்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அரசியல் பிரமுகர்கள் என பலரும் இணைந்து போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது

மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அன்னாரது இளநிலை சட்டத்தரணிகளினால் குறித்த கூட்டம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடத்தப்பட்டது. இதன்போது சாந்தா அபிமன்னசிங்கம் அவர்களின் உருவப்படத்திற்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவஞ்சலி உரையாற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன, தவத்திரு வேலன் சுவாமிகள், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, நீதிபதிகள், சட்டத்தரணிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் வடக்கு வலய முன்னாள் உப தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், ஜூன் 19ஆம் திகதி தனது 77ஆவது வயதில் காலமானார்.

யாழ்ப்பாண மாவட்டச்சட்டத்துறையின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்து இந்த நினைவஞ்சலிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (01)



## “நட்பு மண்” மாதிரிப் பண்ணை சிறுவர் பகுதி சேந்தாங்குளத்தில்



யாழ் எய்ட் நிறுவனத்தினரால் இளவாலை சேந்தாங்குளம் பகுதியில் நிறுவப்பட்ட நட்பு மண் எனும் மாதிரிப் பண்ணையின் சிறுவர் பகுதி நேற்றை தினம் திறந்து வைக்கப்பட்டது.

அமரர் சண்முகநாதன் தேசிகனின் ஞாபகார்த்தமாக அன்னாரின் சகோதரனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1995 ஆம் ஆண்டு மாணவனுமான சண்முகநாதன் குருபரனின் நிதி அனுசரணையுடன் இந்த மாதிரிப் பண்ணை உருவாக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உறவினர்கள், யாழ் எய்ட் உத்தியோகத்தர்கள், தவத்திரு வேலன் சுவாமிகள், முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் உள்ளிட்ட பலரும்கலந்துகொண்டனர்.(01)

## கிளிநொச்சி அம்பாள்குளம் மனோன்மணி அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை முதலாம் வருடப் பூர்த்தி நிகழ்வுகள்





கிளிநொச்சி அம்பாள்குளம் அருள்மிகு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றன.

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சிறீஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சேதுபதி, அன்னை சாரதா வித்தியாலயத்தின் முதல்வர் ரகுராம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவர் சேதுபதி, கிராமத்தின் பொது அமைப்புக்களின் தலைவர்கள், மற்றும் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (02)



# ராகுல் காந்தி மீண்டும் எம்.பி.யானார் தகுதி நீக்கம் திரும்பப் பெறப்பட்டது



அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்டு இருந்த 2 ஆண்டு சிறைத்தண்டனையை சுப்ரீம் கோர்ட் நிறுத்தி வைத்துள்ளதால், அவரது எம்.பி. பதவியை மீண்டும் வழங்க வேண்டும் என காங்கிரஸ் கோரிக்கை விடுத்து வந்தது.

இது தொடர்பாக கட்சியின் மக்களவைத் தலைவர் ஆதிர்ரஞ்சன் சவுத்ரி, சபாநாயகர் ஓம் பிர்லாவை சந்தித்து வேண்டுகோள் விடுத்தார். அத்தோடு, மக்களவைச் செயலகத்தில் மனுவும் அளிக்கப்பட்டு இருந்தது. இந்த மனுவை மக்களவைச் செயலகம் இன்று பரிசீலிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளும், பதவி நீக்கம் செய்யும்போது காட்டிய வேகத்தை மத்திய அரசு திரும்பப் பெறும் விவகாரத்தில் காட்டவில்லை என்று விமர்சித்தன.

இந்த நிலையில், ராகுல் காந்தியின் தகுதி நீக்கத்தை மக்களவைச் செயலகம் திரும்பப் பெற்றுள்ளது. இதன் மூலம் ராகுல் காந்தி மீண்டும் எம்.பி. ஆகியுள்ளார்.

இதையடுத்து, நாடாளுமன்றம் மக்களவைக்கு வந்த ராகுல்காந்தியை காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சியினர் வரவேற்று முழக்கங்களை எழுப்பினர். எம்.பி. முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு ராகுல்காந்தி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

## ஜி 20 உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியா செல்கிறார் ஜோ பைடன்



2023 ஆம் ஆண்டுக்கான ஜி-20 நாடுகளின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. அதன்படி, தனது நாட்டின் பல்வேறு இடங்களில் ஜி-20 மாநாட்டை இந்தியா நடத்துகிறது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஜி-20 நாடுகளின் பிரிதிநிதிகள் இந்தியாவிற்குச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில், வரும் செப்டம்பர் மாதம் 7 ஆம் தேதி அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இந்தியாவிற்குச் செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 10 ஆம் தேதி வரை அவர் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்வார் என்றும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, கூறியபோது, செப்டம்பர் மாதம் இந்தியாவில் பயணம் மேற்கொள்ள ஜனாதிபதி ஜோ பைடன் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார். ஜி-20 தலைவர்கள் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக அவர் இந்தியாவுக்குச் செல்லும் முதல் பயணம் இதுவாகும். அடுத்த சில மாதங்களில் என்ன நடைபெறப்போகிறது, என்பதில் நாங்கள் மிகவும் உற்சாகமாக இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஜுன் மாதம் இந்தியப் பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டபோது, செப்டம்பர் மாதம் டெல்லியில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அதிபர் ஜோ பைடன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் புகையிரதம் தடம் புரள்வு பலி எண்ணிக்கை 30 ஆக அதிகரிப்பு!



பாகிஸ்தான், தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள நவாப்ஷா நகரில் சஹாரா ரயில் நிலையம் அருகே புகையிரதம் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்று இடம்பெற்ற குறித்த விபத்தில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதுடன் ஏறக்குறைய 100 பேர் காயமடைந்துள்ளதாகப் பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர், விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். முன்னதாக, 22 பேர் உயிழுந்துள்ளதாகவும் 80 பேர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. மீட்புப் பணிகள் நேற்று மாலையுடன் நிறைவடைந்த நிலையில் பலி எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதாகவும் 100 பேர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. விபத்தில் காயமடைந்தவர்களை மீட்புக் குழுவினர் மீட்டு வைத்தியசாலைகளில் அனுமதித்துள்ளனர்.

உயிரிழப்பு குறித்து கவலை தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், இறந்தவர்களின் ஆன்மாக்களுக்காகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தனை செய்தார்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக பாகிஸ்தானின் புகையிரதத் துறை அமைச்சர் குவாஜா சாத் ரபிக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் மோசமாகப் பராமரிக்கப்படும் ரயில் பாதைகளில் அடிக்கடி விபத்துகள் நிகழ்கின்றன என்றும் அங்கு காலனித்துவ கால தகவல் தொடர்பு மற்றும் சமிஞ்ஞை அமைப்புகள் நவீனமயமாக்கப்படாமலும் பாதுகாப்பு தரங்கள் மோசமான நிலையிலும் உள்ளன என்றும் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மி)

## பெண்களுக்கு கற்பதற்குத் தடை தலிபான்கள் புதிய கட்டுப்பாடு

ஆப்கானிஸ்தானின் சில பிராந்தியங்களில் பெண் குழந்தைகள் 3 ஆம் வகுப்பிற்கு மேல் படிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.10 வயதிற்கு மேற்பட்ட பெண் குழந்தைகளை பாடசாலைகளை விட்டு அனுப்புமாறு கல்வி நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பெண்களுக்கு எதிராக தலிபான் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டு வரும் கட்டுப்பாடுகளுக்கு உலக நாடுகளும், பல்வேறு அமைப்புகளும் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், தற்போது பெண் பிள்ளைகள் 3 ஆம் வகுப்பிற்கு மேல் படிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (கோ)

## செந்தில் பாலாஜி கைதுக்கு எதிரான மனு சுப்ரீம் கோர்ட்டில் இன்று தள்ளுபடியானது



சட்ட விரோதப் பணபரிமாற்ற வழக்கில் தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜியை இந்திய மத்திய அமலாக்கத்துறை கடந்த ஜுன் மாதம் கைது செய்தது. தற்போது நீதி மன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கும் செந்தில் பாலாஜியின் கைது, சட்ட விரோதமானது எனக் கூறி சுப்ரீம் கோர்ட்டில் அவரது மனைவி தரப்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ஏ.எஸ்.போபண்ணா, எம்.எம். சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய அமர்வு விசரித்தது. இந்த வழக்கின் விசாரணை கடந்த வாரம் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில், செந்தில் பாலாஜி வழக்கில் இன்று காலை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினர். அதில், செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறையினர் கைது செய்தது சட்டவிரோதம் இல்லை என்றும், இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு தடையில்லை என்றும், கைது செய்த பிறகு ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ய முடியாது எனவும் கூறி, மேல்முறையீட்டு மனுவை அவர்கள் தள்ளுபடி செய்துள்ளனர்.

மேலும், புழல் சிறையில் உள்ள செந்தில் பாலாஜியை ஒகஸ்ட் 12 வரை 5 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்கவும் அமலாக்கத்துறைக்கு அனுமதி வழங்கி நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## அவுஸ்திரேலியாவில் காட்டுக் காளானை உட்கொண்ட மூவர் உயிரிழந்துள்ளனர்



அவுஸ்திரேலியாவின் தெற்கு கிப்ஸ்லாந்தில் காட்டுக் காளானை உட்கொண்டதால் மூவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுக் காளானை உண்ட 66 மற்றும் 70 வயதுடைய இரண்டு சகோதரிகள் கடந்த வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். 70 வயதான ஒருவர், சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் அவரும் உயிரிழந்துள்ளார்.

மேலும், 68 வயதுடைய நபர் ஒருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மி)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடைய பிரச்சினை விரைவில் தேசிய தொழிற்சங்கப் போராட்டங்கள்

## தொழிற்சங்க மத்திய நிலைய செயலாளர் தகவல்



(எம்.எப். நவாஸ்)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளக் கட்டமைப்பு மற்றும் நாளாந்த அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, ஏனைய தொழில் சார் பிரச்சினைகள் பற்றிய பிரதேச செயலக ரீதியான தொழிற்சங்க கூட்டம் ஒன்று அட்டாளைச் சேனை பிரதேச செயலகத்தில் இன்று இடம்பெற்றதாக அம் பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தலைவர் கே. எம். கபீர் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு தேசிய இணைந்த சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க மத்திய நிலையத்தின் செயலாளர் தம்மிக முனசிங்க வருகை தந்ததுடன், அட்டாளைச்சேனை பிரதேச செயல கத்தில் கடமையாற்றும் சகல அபிவிருத்தி உத்தியோ கத்தர்களும் பிரசன்னமாகி இருந்தனர்.

எதிர்வரும் வாரங்களில் அபிவிருத்தி உத்தியோகத் தர் களுடைய சம்பளக் கட்டமைப்பை எம் என் 5 ஆக மாற்றுதல் மற்றும் நீண்ட கால தொழில்சார் பிரச்ச ினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பாகத் தேசிய ரீதியில் பல்வேறுபட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்கள் இடம்பெறவுள்ளதாகவும் தேசிய இணைந்த சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத் தலைவர் தம்மிக முனசிங்க இதன் போது தெரிவித்தார்.

மேலும், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களில் சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இன மத மொழி வேறுபாடின்றி ஒட்டுமொத்தப் பங்களிப்பை வழங்கி, தொழில் சார் உரிமைகளை வென்றெடுக்க முன்வர வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டதாக அம்பாறை மாவட்ட தொழிற்சங்கத் தலைவர் தெரிவித்தார்.









## பனங்காடு அக்னி விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் சீருடை வழங்கி வைப்பு



(நூருல்ஹுதா உமர்)

பனங்காடு அக்னி விளையாட்டு கழக உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வானது கழகத்தின் செயற்குழு உறுப்பினர் ரவீந்திரன் வினோஜன் தலைமையில் இன்று பனங்காடு விளையாட்டு மைதான கட்டிடத்தில் இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தனக்கென ஒரு இடத்தை வைத்துக் கொள்ளும் கழகமாகவும், பல சமூக, சமய செயற்பாடுகளில் அக்கறை காட்டும் கழகமாகவும் உள்ள பனங்காடு அக்னி விளையாட்டு கழகத்தினரை ஊக்கப்படுத்தும் விதமாக இளையதம்பி ரவிராஜின் நிதிப் பங்களிப்பில் இளையதம்பி கவிராஜின் பிரசன்னத்துடன் இணைந்த கரங்கள் அமைப்பினால் இந்தச் சீருடைகள் வழங்கி வைக்கப்பட் டன. நிகழ்வில் அதிதியாக விளையாட்டுக் கழகத்தின் ஆலோசகர் ரமேஸ், கழக இயன் மருத்துவர் ரா.கரன், ஆலையடிவேம்பு விளையாட்டு உத்தியோகத்தர் நிஷாந்தன், ஆசிரியர் வாசன், மனோராஜ், இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சுரேஷ், காந்தன் உட்பட ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## சீனத் தலைநகரில் வெள்ளப் பெருக்கு 10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்தனர்





சீனத் தலைநகர் பீஜிங் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் இது வரையில் 10 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்த வெள்ளப் பெருக்கில் சிக்குண்டு 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர்.

அந்தப் பகுதியில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வும், இந்த வெள்ளப் பெருக்கினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவ தற்கான வேலைத்திட்டங்களை அந்த நாட்டு அரசாங்கம் முன்னெடுத்துள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கோ)

# மாதவனை மயிலுத்தமடு விவகாரம் – நீதிமன்ற தடை உத்தரவை சவாலுக்கு உட்படுத்தும் செயற்பாட்டில் பெரும்பான்மையினர்!


மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு பகுதிகளில் கால்நடைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகள் அதிதீவிரமாக பெரும்பான்மை இனத்தவரால் அபகரிக்கப்பட்டு வருவதாக பண்ணையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு அகற்றப்பட்ட புத்த விகாரை ஒன்று மீளவும் நிறுவப்பட்டு நேற்றைய தினம் விசேட பௌத்த நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இதனை அடுத்து மாதவனை மயிலத்த மடு பகுதிக்கு விரைந்து வந்த பெரும்பான்மை இனத்தவர்களைச் சேர்ந்த பலருக்கு கால்நடைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளும் துண்டு துண்டாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

மாதவனை மயிலத்தமடு பகுதியில் இருக்கும் காணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பண்ணையாளர்களின் கால்நடைக்களுக்காக ஒதுக்கப்பட்ட காணியாக இருக்கின்ற காரணத்தினால் தொடர்ந்து பண்ணையாளர்கள் குறித்த காணி விடயம் சம்பந்தமாக தங்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இருந்தாலும், மேல் நீதிமன்றம், மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றங்கள் போன்றவற்றில் தடை உத்தரவு இருக்கின்றபோதிலும் நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி, பெரும்பான்மை இனத்தவர்கள் புத்த விகாரை அமைத்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளுவது பெரும் சவாலையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.



இது தொடர்பாக கிழக்குமாகாண ஆளுநர் மற்றும் அண்மையில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அனைவரது கவனத்திற்கும் கொண்டு சென்றும் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்துமீறிய குடியேற்றம் இன்றுவரை இடம்பெற்றுக்கொண்டிருப்பதாக பண்ணையாளர்கள் குற்றம்சுமத்தி யுள்ளனர்.

தொடர்ச்சியாக இந்த நிலை இடம்பெறுகின்றமையினால் அது ஓர் இன முறுகலை ஏற்படுத்தக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தின் முக்கிய உற்பத்திப் பொருட்களை வழங்குபவையாக இருக்கும் கால்நடைகளை பாதுகாக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

# இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேமிக்கும் நிகழ்ச்சி கிளிநொச்சி பிரதான நிகழ்வு கரைச்சி பிரதேச சபையில்

கிளிநொச்சியில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இலத்திரனியல் கழிவுகளை முறையாக சேமிக்கும் நிகழ்ச்சித் திட்டம் இன்று, கரைச்சி பிரதேச சபையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

சுற்றாடல் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இலத்திரனியல் கழிவுகளை முறையாகச் சேகரிக்கும் ஒரு வார கால நிகழ்ச்சித் திட்டம் இன்று வட மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

இதன் கிளிநொச்சி மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு கரைச்சி பிரதேசசபையில் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்றுள்ளது

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் பி.பத்மகரன், உள்ளூராட்சி உதவியாணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர் மணிமேகலை, சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாணத்திற்கான பணிப்பாளர் மகேஸ் ஜல்தோட்ட மற்றும் துறை சார்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இன்று இலத்திரனியல் கழிவுகளைச் சேகரிக்கும் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றதுடன் அவற்றைச் சேகரிப்பதற்கு அடையாளமாக பயன் தரும் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (02)

# இலங்கை - ஈரான் நாடுகளுக்கிடையில் ஆரம்பமாகவுள்ள பண்டமாற்று முறை



ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியை இந்தமாதம் முதல் பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ் ஆரம்பிப்பதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளது.

2012 ஆம் ஆண்டு ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்காக பண்டமாற்று ஒப்பந்ததின்படி, தேயிலை ஏற்றுமதிக்காக 2021 ஆம் ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகள் காரணமாக அது தாமதமாகியது.

இந்த விடயம் தொடர்பாக, இலங்கைக் கனியவளக் கூட்டுத்தாபனத்துடன் விரைவில் ஒப்பந்தம் செய்த பின்னர், தேயிலை ஏற்றுமதிக்குத் தேவையானவற்றை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்படப்பட்டுள்ளதாக இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவர் நிராஜ் டி மெல் தெரிவித்துள்ளார்.

பண்டமாற்று ஒப்பந்தத்தின் கீழ், 48 மாத காலப்பகுதியில் மாதாந்த அடிப்படையில் சுமார் 5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை உத்தேசித்துள்ளது.

இந்த ஏற்பாடு, ஈரானுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள 251 மில்லியன் அமெரிக்க டொலர் எண்ணெய்க் கொடுப்பனவைத் தீர்ப்பதனை நோக்கமாகக்கொண்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

# "கிளி பீப்பிள்" விளையாட்டு விழா

"கிளி பீப்பிள்" அமைப்பின் ஏற்பாட்டிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இளம் தலைமுறையை போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து பாதுகாக்கவும், விளையாட்டுத் திறனை விருத்தி செய்யும் வகையிலும் குறித்த விளையாட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்து, கரம், பட்மின்ரன் என பல்வேறு விளையாட்டுக்களை உள்ளடக்கி ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு விழாவில் பெருமளவான இளைஞர் யுவதிகள் ஆர்வத்துடன் தமது கழகங்கள் ஊடாகக் கலந்துகொண்டனர்.

பரிசளிக்கும் நிகழ்வு நேற்று நிகழ்வு பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமானது. இதன்போது விருந்தினர் வரவேற்பைத் தொடர்ந்து, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கூடைப்பந்துப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன. தொடர்ந்து, பதக்கங்களும் கேடயங்களும் பணப்பரிசுகளும் வழங்கிவைக்கப்பட்டன.

"கிளி பீப்பிள்" எனும் மக்கள் அமைப்பினால் இந்த விளையாட்டுவிழா ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பாடசாலை அதிபர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

# மசகு எண்ணெய் விலை உலக சந்தையில் ஏற்றம்

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் அதிகரித்துச் செல்கிறது.



இதன்படி, டபிள்யூ.ரி.ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.6 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை இன்றைய தினம் 86.50 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

அதேநேரம், இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலையும், 2.59 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2023இல் வெளியிடப்பெற்றது.